# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை- 2018
## வணிகக்கல்வியும் கணக்கீடும் 1

**தரம்10** **நேரம்:- 1 மணித்தியாலயம்**

**கவனிக்க:-**
- I. **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**
- II. **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) 'அ' பகுதியில் தேவைகள் சிலவும் 'ஆ' பகுதியில் விருப்பங்கள் சிலவும் தரப்பட்டுள்ளது.

| அ | ஆ |
|---|---|
| 1. உணவு | A. மாடி வீடு |
| 2. உடை | B. பாண் |
| 3. வீடு | C. தொலைபேசி |
| 4. தொடர்பாடல் | D. தொப்பி |

'அ' பகுதியில் உள்ளவற்றில் இருந்து 'ஆ' பகுதியில் பொருத்தமானதை தெரிவு செய்க.

1. A, D, C, B
2. B, D, A, C
3. B, D, C, A
4. B, C, A, B

2) கீழ்வருவன வணிகமொன்றின் நோக்கங்கள் சில
   - A. பொருட்கள் சேவைகளின் தரத்தை உயர்த்துதல்
   - B. தொழில் உருவாக்கல்
   - C. இலாபம் உழைத்தல்
   - D. நுகர்வோர் திருப்தியை உயர்வடையச் செய்தல்

   மேற்குறிப்பிட்ட வணிக நோக்கங்களில் பொதுவாகக் காணப்படக் கூடிய வணிக நோக்கம்

1. A யும், C யும்
2. B யும், A யும்
3. C யும், D யும்
4. D யும், A யும்

3) வணிகமொன்றின் அக்கறை கொள்ளும் கட்சியினர் வணிகத்தின் மூலம் நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்த்திருக்கும் நோக்கங்கள் சில
   - A. ஈடுபடுத்திய மூலதனத்தை பாதுகாத்தல்
   - B. தொழிற் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
   - C. தொடர்ச்சியாக பொருட்களுக்கான கட்டளையைப் பெறல்
   - D. எதிர்காலத்தில் வணிக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல்
   - E. தேசிய உற்பத்தியை அதிகரித்துக் கொள்ளல்

மேற்குறிப்பட்ட நோக்கங்களுள் உரிமையாளர் வணிகத்தின் மூலம் எதிர்பார்க்கும் நோக்கம் இரண்டு

1. B யும், E யும்
2. A யும், B யும்
3. C யும், D யும்
4. A யும், D யும்

4) பின்வரும் வணிகங்களில் சேவை உற்பத்தி வணிகங்களை உள்ளடக்கிய தொகுதியினைத் தெரிவு செய்க.

1. மொத்த சில்லறை வியாபார நிறுவனங்கள், பாண் உற்பத்தி, ஆடை உற்பத்தி
2. மொத்த சில்லறை வியாபார நிறுவனங்கள், வங்கிகள், அழகுக் கலை நிலையங்கள்
3. டயர் உற்பத்தி, பாண் உற்பத்தி, ஆடை உற்பத்தி
4. தபால் நிலையம், வாகனம் திருத்துமிடம், பாண் உற்பத்தி



kalvi.lk

5) தேவை, விருப்பம் தொடர்பாக சரியான கூற்றினைத் தெரிவு செய்க
1. தேவைகள் வரையறையற்றவை, விருப்பங்கள் வரையறுக்கப்பட்டவை.
2. தேவைகளை தோற்றுவிக்க முடியும், விருப்பங்களை தேற்றுவிக்கமுடியாது.
3. தேவைகள் அத்தியாவசியமானவை, விருப்பங்கள் அத்தியாவசியமற்றவை.
4. தேவைகள் பல்வகைப்பட்டது, விருப்பங்கள் பொதுத்தன்மை கொண்டவை.

6) பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்வதற்காக வணிகங்களுக்கு தேவையான வளங்கள் ……………………. எனப்படும்.
1. பௌதீகவளம் 3. மூலதனம்
2. உற்பத்திக் காரணிகள் 4. மேற்கூறிய எவையுமல்ல

7) வெதுப்பக உற்பத்தி நிறுவனமொன்றில் உள உழைப்பை வழங்கக் கூடிய ஊழியராகக் கருதப்படப் கூடியவர்,
1. வெதுப்பக முகாமையாளர் 3. வெதுப்பக உரிமையாளர்
2. வெதுப்பக உற்பத்திகளை தயாரிக்கும் தொழிலாளி 4. மேற் கூறிய யாவும் சரி

8) வணிகமொன்றின் பேரினச் சூழல் காரணிகளில் உள்ளடங்காத சூழல் காரணிகளின் தொகுதியைத் தெரிவு செய்க.
1. வாடிக்கையாளர், வழங்குநர், அரசியல் சூழல்
2. உரிமையாளர், முகாமையாளர்கள், ஊழியர்கள்
3. அரசியல் சூழல், சட்டச் சூழல், பொருளாதாரச் சூழல்
4. பொருளாதாரச் சூழல், தொழில்நுட்பச் சூழல், பூகோளமயச் சூழல்

9) வணிகமொன்றின் அகச் சூழல் ஆய்வின் மூலம் …………….. இனையும், …………….. இனையும் கண்டு கொள்ளமுடியும்.
1. பலம், வாய்ப்பு 3. பலம், பலவீனம்
2. வாய்ப்பு, அச்சுறுத்தல் 4. பலவீனம், அச்சுறுத்தல்

10) அரசினது நிலைப்புத்தன்மை, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மற்றும் வரவு செலவுத் திட்டக் கொள்கைகள், தொழிலாளர் கொள்கைகள் என்பன வணிகமொன்றின் தாக்கத்தை ஏற்படுத்தும் சூழல் காரணியாகக் கருதக் கூடியது.
1. பொருளாதாரச் சூழல் 3. பூகோளமயச் சூழல்
2. சட்டச் சூழல் 4. அரசியல் சூழல்

11) நிரல் ‘அ’ ஆனது குறிப்பிட்ட சில நாடுகளையும், நிரல் ‘ஆ’ ஆனது அந்நாடுகளில் பரிமாற்றப்படும் நாணய அலகுகளையும் குறிப்பிடுகின்றது.

| அ | ஆ |
|---|---|
| 1. அமெரிக்கா | A. யென் |
| 2. யப்பான் | B. ரிங்கிற் |
| 3. பிரித்தானியா | C. டொலர் |
| 4. மலேசியா | D. பவுண்ஸ் |

‘அ’ ‘ஆ’ விற்கு இடையிலான பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.
1. B, C, D, A 3. C, A, D, B
2. D, B. A, C 4. D, C, B, A

12) 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து வங்கி வட்டியானது 2% த்தினால் அதிகரிக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வணிகங்களுக்கு ஏற்படும் தாக்கங்களைக் காட்டும் சரியான விடையினைத் தெரிவு செய்க.
1. வணிகம் கடன் எடுப்பதற்கு ஊக்குவிக்கப்படும்.
2. வணிகங்கள் வைப்பிலிடும் பணத்தின் அளவைக் குறைக்கும்.
3. வணிகமானது கடன் எடுப்பதை மட்டுப்படுத்தும்.
4. பண்டங்கள் சேவைகளின் விற்பனை விலை உயர்வடையும்.

13) சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1. பலம்:- நுகர்வோரின் வாழ்க்கைப் பாங்கு மாற்றமடைதல்
2. பலவீனம்:- போட்டியாளர்கள் உருவாகுதல்
3. வாய்ப்பு:- புதிய நகரங்கள் உருவாக்கப்படல்
4. அச்சுறுத்தல்:- பணியாளர்களின் எதிர்மறை மனப்பாங்கு

14) வணிகச் சூழல் தொடர்பாக கீழே தரப்படும் கூற்றானது வணிகமொன்றின் எத்தகைய சூழல் காரணிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்?
"சர்வதேச ரீதியில் பிரசித்தமடைந்த நிறுவனங்களின் பண்டங்கள், சேவைகள் உள்நாட்டுச் சந்தைக்கு வருவதனால் உள்நாட்டு வணிகம் விருத்தியடையும் அதே வேளை உள்நாட்டு ரீதியில் செயற்படும் உள்நாட்டு நிறவனங்களின் நிலைப்புத்தன்மை நெருக்கடிக்குள்ளாகின்றன"
1. பூகோளமயச் சூழல்
2. பொருளாதாரச் சூழல்
3. தொழில்நுட்பச் சூழல்
4. சட்டச் சூழல்

15) பின்வரும் வணிக அமைப்புகளில் இலாப நோக்குள்ள வணிக அமைப்புக்களை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.
1. தனியாள் உரிமை, பங்குடைமை, அரச கூட்டுத்தாபனம்
2. கூட்டுறவுச் சங்கங்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள்
3. தனியாள் உரிமை, பங்குடைமை, கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
4. அரச கம்பனிகள், கூட்டுறவுச் சங்கங்கள், அரச திணைக்களங்கள்

16) வணிக அமைப்புக்களை வகைப்படுத்தும் நியதிகள் சில கீழே தரப்படுகின்றன. இவற்றுள் அளவு ரீதியான நியதியாகக் கருதப்பட முடியாதது எது?
1. வணிகத்தின் மூலதன அளவு
2. ஊழியர்களின் எண்ணிக்கை
3. பயன்படுத்தும் வலுவின் அளவு
4. ஊழியர் வினைத்திறன்

17) பங்காளரது உச்ச எண்ணிக்கை 20 பேர் என வரையறுக்கும் சட்டம்,
1. 1918ம் ஆண்டு 06ம் இலக்க வியாபார பெயர்ப்பதிவு கட்டளைச் சட்டம்
2. 1972ம் ஆண்டு 05ம் இலக்க கூட்டுறவுச் சட்டம்
3. 1890ம் ஆண்டு பங்குடமைக் கட்டளைச் சட்டம்
4. 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிச் சட்டம்

18) சட்ட ரீதியாக தனி மனித அந்தஸ்து உடையதும், பங்குகளை வெளியிட்டு மூலதனத்தை திரட்டக் கூடியதும், பங்குதாரரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதுமான வணிக அமைப்பு,
1. கூட்டுறவுச் சங்கங்கள்
2. அரச கூட்டுத்தாபனங்கள்
3. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
4. அரச திணைக்களங்கள்

19) கூட்டுறவு அமைப்பில் காணப்படக் கூடிய விஷேட பண்புகளாகக் கருதப்பட முடியாதது,
1. இலாபமும், உரிமையும் அதிகமானவர்களிடையே பகிரப்படல்
2. ஜனநாயக நிருவாகம் நடைபெறுகின்றமை
3. சுயமான திறந்த அங்கத்துவம்
4. அங்கத்தவர்களுக்கு சமமான உரிமை

20) கேசவன் என்பவர் தனித்தீர்மானம் எடுப்பதில் ஆர்வம் கொண்டவராகவும், எந்தவொரு இடரையும் தனித்து பொறுப்பேற்கும் சக்தியுடையவராகவும் காணப்படுகின்றாராயின் அவர் பின்வரும் வணிக அமைப்பில் எவ் வணிக அமைப்பினை ஆரம்பிக்க முடியும்.
1. பங்குடமை வணிகம்
2. தனியுடமை வணிகம்
3. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
4. கூட்டுறவுச் சங்கங்கள்



kalvi.lk

21) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பொது அல்லது விஷேட சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் வணிக அமைப்பு,
   1. அரச கூட்டுத்தாபனம்
   2. அரச திணைக்களங்கள்
   3. அரச கம்பனிகள்
   4. கூட்டுறவுச் சங்கங்கள்

22) கணக்கீட்டின் பிரதான நோக்கமாகக் கருதப்படக்கூடியது,
   1. வணிகத்தின் நிதி நிலைமையை அறிவதற்கு
   2. சட்டத் தேவைப்பாடுகளை நிறைவேற்றல்
   3. அக்கறை கொண்ட தரப்பினருக்கு தேவையான பல்வேறு தகவல்களை வழங்க
   4. இலாபத்தை சரியாக கணக்கிடுவதற்கு

23) வணிகமொன்றில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே தரப்படுகின்றன. இவற்றில் கணக்கீட்டில் கருத்தில் கொள்ளப்படாத கொடுக்கல் வாங்கலைத் தெரிவு செய்க,
   1. ரூ 5000 கடன் வருமதியொன்று அறவிடமுடியாக் கடனாக காணப்படல்
   2. மாதாந்த வாடகைக் கொடுப்பனவு ரூ 10 000
   3. முகாமை சாரா ஊழியர் எண்ணிக்கை 20 ஆகும்
   4. ரூ 10 000 பெறுமதியான பொருட் தொகுதியொன்று அழிவுறுதல்

24) சொத்தொன்றின் பண்பு அல்லாதது,
   1. நிகழ்காலக் கடப்பாடு கொண்டதாகக் காணப்படல்
   2. வணிகத்தினால் கட்டுப்படுத்தக் கூடியதாக இருத்தல்
   3. கடந்த காலக் கொடுக்கல் வாங்கல் அல்லது நிகழ்வு ஒன்றின் பெறுபேறாக உருவாகுதல்
   4. எதிர் காலத்தில் பொருளாதார நலன்கள் உட்பாய்ச்சப்படல்

25) கீழ் வரும் "அ" பகுதிக்கு பொருத்தமானதை "ஆ" பகுதியில் இருந்து தெரிவு செய்யும் போது சரியான விடை,

| (அ) | (ஆ) |
|---|---|
| 1. வருமானம் | A. காப்புறுதிக் கட்டணம் |
| 2. செலவு | B. மோட்டார் வாகனம் |
| 3. சொத்து | C. கடன் கொடுத்தோர் |
| 4. பொறுப்பு | D. கிடைத்த தரகு |

   1. A ,B ,D ,C
   2. D ,A ,B ,C
   3. B ,A ,C ,D
   4. C ,A ,D ,B

26) பொறுப்புக்களை மட்டும் கொண்ட தொகுதியினைத் தெரிவு செய்க.
   1. நிலம், தளபாடம், இயந்திரம்
   2. வங்கிக்கடன். மோட்டார் வாகனம், கடன் கொடுத்தோர்
   3. வங்கி மேலதிகப்பற்று, கடன் கொடுத்தோர், வங்கிக்கடன்
   4. கடன் கொடுத்தோர், கடன்பட்டோர், காசு

27) கொடுக்கல் வாங்கலொன்று கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

சொத்துக்கள் = உடைமையாளர் உரிமை + பொறுப்புக்கள்
-20000 = -20000

மேலே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்
1. குமரன் என்பவரிடம் ரூ 20000 பெறுமதியான பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டமை
2. கடன்கொடுத்தோரான ஆதித்யாவிற்கு ரூ 20000 காசாக செலுத்தியமை
3. வாடகை ரூ 20000 காசாக செலுத்தியமை
4. சொந்தத் தேவைக்காக ரூ 20000 பெறப்பட்டமை.



kalvi.lk

28) வணிகத்தின் உரிமையாளன் வணிகத்தின் காசு, பொருட்கள் அல்லது வேறு சொத்துக்களை தனது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக எடுப்பனவு செய்யும்போது கணக்கீட்டில் ஏற்படும் தாக்கத்தை சரியாகக் காட்டுவது,

1. சொத்துக்கள் குறைவடையும், உரிமைகள் குறைவடையும்
2. சொத்துக்கள் குறைவடையும், பொறுப்புக்கள் குறைவடையும்
3. சொத்துக்கள் குறைவடையும், பொறுப்புக்கள் அதிகரிக்கும்
4. செலவுகள் அதிகரிக்கும், உரிமைகள் குறைவடையும்

29) உரிமையாளர் ரூ 100000 பெறுமதியான தனது மோட்டார் வாகனமொன்றை வணிகத்தில் ஈடுபடுத்தும்போது அதற்கான இரட்டைப் பதிவு,

1. மோட்டார் வாகனக் கணக்கு வரவு ரூ 100000
   காசுக் கணக்கு செலவு ரூ 100000
2. மோட்டார் வாகனக் கணக்கு வரவு ரூ 100000
   பற்றுக் கணக்கு செலவு ரூ 100000
3. மோட்டார் வாகனக் கணக்கு வரவு ரூ 100000
   மூலதனக் கணக்கு செலவு ரூ 100000
4. மோட்டார் வாகனக் கணக்கு வரவு ரூ 100000
   பொறுப்புக் கணக்கு செலவு ரூ 100000

30) நிரல் ‘அ’ வில் கொடுக்கல் வாங்கல்களும், நிரல் ‘ஆ’ இல் மூலஆவணங்களும் தரப்படுகின்றன.

| ‘அ’ | ‘ஆ’ |
|---|---|
| 1. கடனுக்கு தளபாடம் விற்பனை ரூ 30000 | K. கொடுப்பனவுக் கைச்சாத்து |
| 2. கடன்பட்டோரிடம் காசு ரூ 25000 பெற்றது. | L. விற்பனைப் பட்டியல் |
| 3. மஞ்சுளாவிற்கு கடனுக்கு விற்பனை ரூ 5000 | M. நாட்குறிப்பு கைச்சாத்து |
| 4. மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூ 5000 | N. பற்றுச் சீட்டு |

‘அ’ நிரலையும் ‘ஆ’ நிரலையும் இணைக்கும் போது கிடைக்கும் சரியான விடை

1. L, K, N, M
2. M, N, L, K
3. M, K, L, K
4. N, M, K, L

31) பொறுப்பொன்று குறையும் அதேவேளை, காசுச் சொத்து குறையும் இரட்டை விளைவினைக் காட்டும் சரியான கொடுக்கல் வாங்கலொன்றைத் தெரிவு செய்க.

1. ஊழியருக்கு சம்பளம் வழங்குதல்
2. வங்கியிலிருந்து கடன் பெறல்
3. வங்கிக் கடனை மீளச் செலுத்துதல்
4. கடனுக்கு விற்பனை செய்தல்

32) நிரல் ‘அ’ ஆனது பேரேட்டுக் கணக்குகளின் வகைகளையும், நிரல் ‘ஆ’ ஆனது அவற்றில் உள்ளடங்கும் கணக்குகளையும் காட்டுகின்றது.

| ‘அ’ | ‘ஆ’ |
|---|---|
| 1. சொத்துக் கணக்குகள் | P. பற்றுக் கணக்குகள் |
| 2. பொறுப்புக் கணக்குகள் | Q. தரகு வருமானக் கணக்கு |
| 3. உரிமைக் கணக்குகள் | R. வங்கிக் கடன் கணக்கு |
| 4. வருமானக் கணக்கு | S. கடன்பட்டோர் கணக்கு |

‘அ’ நிரலையும் ‘ஆ’ நிரலையும் இணைக்கும் போது கிடைக்கும் சரியான விடை

1. Q, R, S, P
2. S, R, Q, P
3. S, R, P, Q
4. R, S, Q, P



kalvi.lk

33) விமலா வணிகத்தின் 2017 ஆண்டிற்குரிய தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மூலதனம்(2017.01.01 இல்) | ரூ 500000 |
| விற்பனைகள் | ரூ 100000 |
| பெற்றகழிவு | ரூ 25000 |
| வருடத்திற்கான செலவுகள் | ரூ 50000 |
| பற்று | ரூ 10000 |

விமலா வணிகத்தின் 31.12.2017 உள்ளபடியான உரிமையாளரின் உரிமை?

1. ரூ 550000  2. ரூ 565000  3. ரூ 590000  4. ரூ 625000

34) வணிகங்களின் பொருட்களின் பட்டியல் விலையிலிருந்து யாதேனுமொரு தொகையைக் குறைத்து விற்பனை செய்யும்போது வழங்கப்படும் கழிவு எவ்வாறு அழைக்கப்படும்?

1. கொடுத்த கழிவு  2. பெற்றகழிவு  3. காசுக் கழிவு  4. வியாபாரக் கழிவு

35) மூல ஏடாகவும், பேரேட்டுக் கணக்கொன்றாகவும் தொழிற்படும் ஏடு?

1. காசேடு  2. கொள்வனவு நாட்குறிப்பு  3. விற்பனை நாட்குறிப்பு  4. பொது நாட்குறிப்பு

36) சில்லறைக் காசு வசக்கட்டு முற்பணம் பெறும்போது அதற்கான சரியான இரட்டைப் பதிவாக அமைவது,

1. காசுக் கணக்கு வரவு, சில்லறைக் காசேடு செலவு
2. சில்லறைக் காசேடு வரவு, காசுக் கணக்கு செலவு
3. சில்லறைக் காசேடு வரவு, வங்கிக் கணக்கு செலவு
4. வங்கிக் கணக்கு வரவு, சில்லறைக் காசேடு செலவு

37) வங்கியில் காசு வைப்பிலிடும்போது அதற்குரிய மூல ஆவணமாகக் கருதப்படுவது,

1. காசோலை அடியிதழ்  3. வைப்புச் சீட்டு
2. பற்றுச்சீட்டு  4. விற்பனைப் பட்டியல்

38) கொடுத்த கழிவானது பின்வரும் கழிவுகளில் எவ்வகையைச் சார்ந்தது?

1. வியாபாரக் கழிவு  3. காசுக்கழிவு
2. கணியக் கழிவு  4. பருவகாலக் கழிவு

39) விற்பனை மூலம் பெற்ற ரூ 20000 பெறுமதியான காசோலை அச்சந்தர்ப்பத்திலேயே வங்கியில் வைப்புச் செய்யப்படும் போது அதற்கான சரியான இரட்டைப்பதிவாக அமைவது,

1. வங்கிக் கணக்கு வரவு ரூ 200000, காசுக் கணக்கு செலவு ரூ 20000
2. காசுக் கணக்கு வரவு ரூ 20000, வங்கிக் கணக்கு செலவு ரூ 20000
3. வங்கிக் கணக்கு வரவு ரூ 20000, விற்பனைக் கணக்கு செலவு ரூ 20000
4. காசுக் கணக்கு வரவு ரூ 20000, விற்பனைக் கணக்கு செலவு ரூ 20000

40) நிஸாம் நிறுவனத்தில் கடன்கொடுத்தோரான கமலுக்கு வழங்கப்பட்ட ரூ 20000 பெறுமதியான காசோலை ஒன்று மறுக்கப்பட்டுள்ளது என வங்கியால் அறிவிக்கப்படுகின்றது. இதன்போது மறுக்கப்பட்ட காசோலைக்கான இரட்டைப் பதிவாக அமைவது,

1. கமல் கணக்கு வரவு ரூ 20000, வங்கிக் கணக்கு செலவு ரூ 20000
2. வங்கி கணக்கு வரவு ரூ 20000, கமல் கணக்கு செலவு ரூ 20000
3. வங்கி கணக்கு வரவு ரூ 20000, நிஸாம் கணக்கு செலவு ரூ 20000
4. கமல் கணக்கு வரவு ரூ 20000, நிஸாம் கணக்கு செலவு ரூ 20000

(40×1=40 புள்ளிகள்)



kalvi.lk

# மாகாணக்கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை- 2018
### வணிகக்கல்வியும் கணக்கீடும் 11

**தரம்10** **நேரம்:- 2 மணித்தியாலங்கள்**

**அறிவுறுத்தல்:-**
**முதலாம் வினா உட்பட, பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 11 இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை**

1. பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி (1) தொடக்கம் (10) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மதுரன் என்பவர் க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவில் கல்வி பயின்றவர். பல்கலைக் கழக அனுமதி கிடைக்கப் பெறாமையினால் தான் கற்ற பாடஅறிவு, தன்னிடம் இயல்பாகவே காணப்படும் வடிவமைப்புத்திறன் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆண்,பெண்களுக்கான கைப்பைகளை உற்பத்தி செய்யும் வியாபாரமொன்றை ஆரம்பிக்க உத்தேசித்தார். 01.01.2017 இல் தனது உயர்தர வகுப்பு நண்பன் கண்ணனை இணைத்துக் கொண்டதுடன், அவர் முகாமைக் கற்கை பயின்றதால் தனது உற்பத்தி நிறுவனத்தின் முகாமை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பொறுப்பை ஒப்படைத்து அவருக்கு மாதம் ரூ 30000 கொடுப்பதற்கும் சம்மதம் தெரிவித்தார். மதுரன் 01.01.2017 இல் ரூ 200000 முதலிட்டதுடன், மேலதிகமான நிதித்தேவைக்காக ரூ 150000 வங்கிக் கடன் ஒன்றையும் பெற்றுக்கொண்டார். இவ்வணிகத்திற்கு 'மது கை பை உற்பத்தி நிறுவனம்' என பெயரிட்டார்.

இந்நிறுவனத்தின் ஜனவரி முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல், வாங்கல்கள் வருமாறு.

| | |
|---|---|
| 02.01.2017 | ரூ 50000 இட்டு நடைமுறைக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. |
| 04.01.2017 | கைபை உற்பத்திக்காக ரூ 40000 பெறுமதியான தையல் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. |
| 06.01.2017 | ரூ 25000 பெறுமதியான மூலப்பொருள் கொள்வனவு செய்யப்பட்டது. |
| 07.01.2017 | ரூ 45000 பெறுமதியான கைப்பைகள் காசுக்கு விற்பனை செய்யப்பட்டது |

1. மேற்குறிப்பிட்ட தகவலுக்கு அமைவாக இது எவ்வகையான வணிக அமைப்பினைச் சார்ந்தது என்பதைக் குறிப்பிடுக.
2. குறிப்பிட்ட வணிக அமைப்பினை பதிவு செய்வது தொடர்பாக உமது கருத்து யாது?
3. மதுரன் தனது வணிகத்தை எதிர்காலத்தில் விரிவுபடுத்த விரும்பினால் அவர் எத்தகைய வணிகங்களை ஆரம்பிக்க முடியும்.
4. மேற்குறித்த தரவுகளுக்கு அமைவாக மதுரன் வணிகத்தின் பலமான அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. மதுரன் வணிகத்தின் 01.01.2017 இல் காணப்படும் நிதிநிலைமையை கணக்கீட்டுச் சமன்பாட்டில் காட்டுக.
6. வங்கியில் நடைமுறைக் கணக்கை ஆரம்பிப்பதற்கான இரட்டைப்பதிவினைத் தருக.
7. மதுரன் வணிகத்தினால் பேணப்படக்கூடிய மூல ஏடு ஒன்றினைக் குறிப்பிட்டு அதற்குரிய மூலஆவணம் இரண்டினைத் தருக.
8. 04.01.2017 இல் இடம்பெற்ற கொடுக்கல் வரங்கலுக்கான இரட்டைப்பதிவினைத் தருக.
9. மதுரன் வணிகத்தில் காணப்படக்கூடிய நடைமுறைச் சொத்துக்கள் இரண்டின் பெயர்களைத் தருக.
10. இவ்வணிகத்தின் 07.01.2017 ற்கான காசுமீதியினைக் கணிக்குக.

(02×10=20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி 1
## வணிகக் கல்வி
### ( இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)

**வினா இல 02**

1. (அ) மனித தேவைகள் என்றால் என்ன? (01 புள்ளி)

(ஆ) கீழே தரப்படும் விடயங்களை தேவைகள் வேறாகவும், விருப்பங்கள் வேறாகவும் பட்டியல்படுத்திக் காட்டுக.

| | | |
|---|---|---|
| கல்வி | இடியப்பம் | தென்னம் ஓலையால் வேய்ந்த வீடு |
| சுகாதாரம் | உறையுள் | கண்ணாடி வளையல் |

(01 புள்ளி)

2. வணிகமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளின் தன்மைக்கமைய வணிகங்களை வகைப்படுத்திக் காட்டுக. (02 புள்ளிகள்)
3. உற்பத்திக் காரணிகளைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றிற்கும் ஓர் உதாரணம் தருக. (02 புள்ளிகள்)
4. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா எனக் குறிப்பிடுக.
   a) யாதேனும் வணிகமொன்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களுக்குச் சமமான பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துபவர்கள் வழங்குநர் எனப்படுவர்.
   b) வசிப்பிடம், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொடர்பாடல் என்பன தேவைகள் ஆகும்.
   c) குடிபானங்கள், மோட்டார்வாகனம், மின்குமிழ் என்பன பொருள் உற்பத்தி வணிகங்களுக்கு உதாரணங்கள் ஆகும்.
   d) தேவைகளை வணிகர்களால் தோற்றுவிக்க முடியாதிருப்பதுடன் விருப்பங்களை தோற்றுவிக்க முடியும். (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

---

**வினா இல 03**

1. வணிகச் சூழலை வகைப்படுத்திக் காட்டுக. (02 புள்ளிகள்)

2. பின்வரும் சட்டதிட்டங்களை செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள பதவிகள் அல்லது நிறுவனங்களைக் குறிப்பிடுக.
   (அ) 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்
   (ஆ) 2009 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம். (02 புள்ளிகள்)

3. (அ) பொருளாதாரச் சூழல் காரணிகளுக்கு நான்கு உதாரணம் தருக. (01 புள்ளி)
   (ஆ) உள்நாட்டு வணிகத்தில் பூகோளமயச் சூழலினால் ஏற்படும் சாதகமான விளைவுகள் இரண்டு தருக. (01 புள்ளி)

4. பின்வரும் விடயங்களை வணிகமொன்றின் பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் என வேறுபடுத்திக் காட்டுக.
   a) புதிய தொழினுட்ப முறைகளிற்கு இயைபாக்கமடைவதில் காணப்படும் சிரமங்கள்
   b) நவீன தொழினுட்பங்களை பயன்படுத்தாமை
   c) போதியளவான மூலதனம் காணப்படுதல்
   d) வணிகத்திற்கு வரிச்சலுகைகள் கிடைத்தல் (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)



kalvi.lk

**வினா இல 04**

1. பின்வரும் வணிக நிறுவனங்களை தனியார்துறை வணிகம், பொதுத்துறை வணிகம் என வகைப்படுத்திக் காட்டுக.
   - a) குமரன் ஸ்ரோர்ஸ்
   - b) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
   - c) இலங்கை மின்சார சபை
   - d) சண்முகம் அன்ட் சண்ஸ்
   - e) வரையறுக்கப்பட்ட நிப்பொன் கம்பனி
   - f) சுகாதாரத் திணைக்களம்
   - g) ஸ்ரார் விளையாட்டுக் கழகம்
   - h) நகர சபை/ பிரதேச சபைகள்

   (02 புள்ளிகள்)
2. வணிக அமைப்புக்களை பருமன் அடிப்படையில் வகைப்படுத்தும்போது அளவு ரீதியாக வகைப்படுத்தும் நியதிகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
3. தனியாள் உரிமை வணிக அமைப்பின் அனுகூலங்கள் நான்கு தருக. (02 புள்ளிகள்)
4. பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா எனக் குறிப்பிடுக.
   - a) ஜனநாயக நிருவாகம், சுயமான திறந்த அங்கத்துவம் கொண்ட வணிக அமைப்பு கூட்டுத்தாபனம் ஆகும்.
   - b) அரச நிதிப்பிரமாணங்கள், நிருவாகப்பிரமாணங்கள், பல்வேறு சுற்றுநிருபங்கள் போன்றவற்றிற்கேற்பத் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளும் அரச அமைப்பு அரச திணைக்களங்கள் ஆகும்.
   - c) கமலக்கண்ணன் என்பவர் தனது வணிகத்தை கண்ணன் பெயரில் நடாத்திச் செல்வாராயின் வணிகத்தின் பெயரை பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.
   - d) பங்காளரது ஆரம்ப மூலதனம் ரூ 1000 அல்லது அதற்கு மேற்பபடின் பங்குடைமை எழுத்து மூலமான ஒப்பந்தத்தை கொண்டிருக்க வேண்டுமென 1890 ஆம் ஆண்டு பங்குடைமை கட்டளைச் சட்டம் வலியுறுத்துகின்றது. (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

---

## பகுதி 11
## கணக்கியல்
### ( இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)

**வினா இல 05**

1. வணிகம் ஒன்றின் பின்வரும் உருப்படிகள் அவற்றின் கணக்கேடுகளில் இருந்து எடுக்கப்பட்டன.

   தொலைபேசிக் கட்டணம்
   வங்கிக்கடன்
   விற்பனை
   மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல்
   பெற்றதரகு
   கடன்பட்டோர்
   கடன்கொடுத்தோர்
   இயந்திரம்
   மூலதனம்
   பற்று

   மேலே தரப்பட்ட உருப்படிகளை கீழே தரப்பட்ட தலைப்புகளின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.
   - a. சொத்துக்கள்
   - b. வருமானம்
   - c. பொறுப்புக்கள்
   - d. செலவுகள்

   (02 புள்ளிகள்)
2. அ) வணிகமொன்றின் உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
   ஆ) பொறுப்புக்களின் வகைகளைக் குறிப்பிடுக.

   (02 புள்ளிகள்)
3. கணனி இயந்திரங்களை பழுதுபார்க்கும் கிருபா வணிகத்தில் 2017 ஜனவரி முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல், வாங்கல்கள் வருமாறு:-
   1) உரிமையாளரால் மூலதனம் இட்டது ரூ 50000



kalvi.lk

2) வங்கிக்கடன் பெற்றது ரூ 75000

3) கணனி பழுதுபார்த்தல் மூலம் பெற்ற வருமானம் ரூ 60000

4) வணிகம் இயங்கும் கட்டிடத்தின் மாதாந்த வாடகை செலுத்தியது ரூ 10000

❖ மேற்படி கொடுக்கல், வாங்கல்களை பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதிந்து காட்டுக.

உரிமை + பொறுப்பு = சொத்துக்கள்

(04 புள்ளிகள்)

4. வினா 03 இல் குறிப்பிட்ட கிருபா வணிகத்தின் 2017 ஜனவரி முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல், வாங்கல்களுக்கான இரட்டைப்பதிவினைத் தருக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

---

**வினா இல 06**

1. அ) மூல ஆவணங்களின் பயன்பாடுகள் இரண்டு தருக.
ஆ) கொடுப்பனவுக் கைச்சாத்து என்றால் என்ன? (02 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா எனக் குறிப்பிடுக.
   a) வணிகக் கருமங்களுக்கு பயன்படுத்தப்படுகின்ற கட்டிடம், மோட்டார் வாகனம், சரக்கிருப்பு, காசு என்பன பொறுப்புக்கள் ஆகும்.
   b) வணிகத்தின் மொத்தச் சொத்துக்களில் இருந்து மொத்தப் பொறுப்புக்களை கழித்து வருவது உரிமையாகும்.
   c) காசேட்டில் காணப்படும் கழிவு நிரலானது பேரேட்டுக் கணக்கொன்றின் தொழிற்பாட்டினை மேற்கொள்கின்றது.
   d) பொது நாட்குறிப்பிற்குரிய மூல ஆவணம் பற்றுச்சீட்டு ஆகும். (02 புள்ளிகள்)

3. அ) பேரேட்டுக் கணக்குகளின் வகைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
ஆ)பெற்றகழிவிற்குரிய இரட்டைப் பதிவினைத் தருக. (02 புள்ளிகள்)

4. வருண் வணிகத்தின் கணக்கீட்டு லிகிதர் மூலம் 2018 ஜனவரி மாதத்தில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டு பின்வரும் காசுக் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

வரவு காசுக் கணக்கு செலவு

| திகதி | விபரம் | பே.ப | தொகை ரூ | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| ஜன 01 | மூலதனக் கணக்கு | | 50000 | ஜன 05 | கொள்வனவு கணக்கு | | 40000 |
| 06 | விற்பனைக் கணக்கு | | 40000 | 10 | தளபாடக் கணக்கு | | 60000 |
| 08 | வங்கிக்கடன் கணக்கு | | 45000 | 12 | காப்புறுதிக் கணக்கு | | 5000 |
| 22 | குமரன் கணக்கு | | 4000 | 25 | வங்கிக்கடன் வட்டி க/கு | | 2000 |

மேலே காட்டப்பட்ட காசுக் கணக்கில் பதியப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களைத் திகதி ஒழுங்கின்படி விபரித்துக் கூறுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)



kalvi.lk

**வினா இல 07**

1. அ) மூல ஏடுகளின் பெயர்கள் நான்கு தருக.
   ஆ) வங்கியின் நடைமுறைக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்தப்படும் மூல ஆவணங்கள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

2. பவித்திரா வணிகத்தின் சில்லறைக் காசு வசக்கட்டுத் தொகை ரூ 3000 ஆகும். கிடைக்கப்பெற்ற முற்பணக் காசின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சில்லறைக் காசுக் கொடுப்பனவுகள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| எழுதுகருவி | ரூ 450 |
| சுத்திகரிப்புச் செலவுகள் | ரூ 800 |
| உபசரணைச் செலவுகள் | ரூ 600 |
| போக்குவரத்துச் செலவுகள் | ரூ 500 |

   மேற்குறித்த தகவலின்படி குறிப்பிட்ட வணிகத்தின் சில்லறைக் காசுக் கட்டுநிதி (வசக்கட்டு) மீள்நிரப்பல் தொகை எவ்வளவு? (02 புள்ளிகள்)

3. காயா நிறுவனத்தில் இடம்பெற்ற பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான இரட்டைப்பதிவினைத் தருக.
   a) கடன்பட்டோரான தீபனிடமிருந்து பெறப்பட்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ10000 பெறுமதியான காசோலை வங்கியால் மறுக்கப்பட்டுள்ளது என வங்கியால் அறிவிக்கப்பட்டுள்ளது.
   b) சம்பளத்திற்கென வழங்கப்பட்ட காசோலை ரூ 15000 மறுக்கப்பட்டுள்ளது.
   c) வங்கியில் ரூ 50000 வைப்புச் செய்யப்பட்டு நடைமுறைக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது.
   d) ரூ 25000 பெறுமதியான காசோலை ஒன்று கடன்பட்டோரான திலீபனிடமிருந்து பெறப்பட்டது. (04 புள்ளிகள்)

4. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் கரன் வணிகத்தில் 2017 பெப்ரவரி மாதத்தில் இடம்பெற்றன.

| | |
|---|---|
| 2017.02.01 | ரூ 30000 வங்கியில் வைப்புச் செய்து நடைமுறைக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. |
| 2017.02.06 | கடன்பட்டோரான நிஸாத்திடம் இருந்து கிடைக்கப் பெற்ற 565 இலக்கம் கொண்ட காசோலை ரூ 4000 வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. |
| 2017.02.10 | விற்பனைக்காக கிடைக்கப்பெற்ற 645 இலக்கம் கொண்ட காசோலை ரூ 15000 பெறுமதியான காசோலை ஒன்று அச்சந்தர்ப்பத்திலேயே வங்கியில் வைப்பிலிடப்பட்டது. |
| 2017.02.20 | மின்சாரக் கட்டணத்திற்காக 345 ஆம் இலக்கம் கொண்ட ரூ 6000 பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது. |

   மேற்குறிப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை வங்கிக் கணக்கில் பதிவு செய்து காட்டுக.
   (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினுாடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page